# கணக்கீடு

## ஒதுக்கங்களை மூலதனமாக்கல், உரிமை வழங்கல் என்பன தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிதல்



தேர்ச்சி 12

தேர்ச்சி மட்டம் 12.3

## ஒதுக்கங்களை மூலதனமாக்கல் , உரிமை வழங்கல் என்பன தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிதல்

### உபகாரப் பங்கு வழங்கல்

கம்பனிச் சட்டத்தில் உபகாரப் பங்கு தொடர்பாக எதுவும் கூறப்படாவிட்டாலும் உபகாரப் பங்குகள் வழங்கப்பட முடியும். உபகாரப் பங்கு வழங்கல் என்பது கம்பனியொன்றினால் தீர்மானிக்கப்பட்ட பங்கினது பெறுமதிக்கு கம்பனியிலுள்ள ஒதுக்கங்களை மூலதனமாக்கல் செய்வதாகும்

### உபகாரப் பங்கு வழங்கலுக்கான பொது நாட்குறிப்பு பதிவுகள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| குறித்த ஒதுக்கங்கள் கணக்கு | வரவு | XXX | |
| கூறப்பட்ட மூலதனக் கணக்கு | செலவு | | XXX |

**உதாரணம்**

வரையறுக்கப்பட்ட கலைமகள் பொதுக்கம்பனியின் 2018.03.31ந் திகதியில் இருந்தவறான நிதிநிலைமைக்கூற்றின் உருப்படிகள் பின்வருமாறு



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| கூறப்பட மூலதனம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| சாதாரண பங்குகள் (10 000) | | 300 000 |
| **ஒத்துக்கங்கள்** | | |
| மீளமதிப்பீட்டு ஒதுக்கம் | 18 000 | |
| பொது ஒதுக்கம் | 20 000 | |
| நிறுத்தி வைத்த இலாபம் | 20 000 | 58 000 |
| மொத்த உரிமையாண்மை | | 358 000 |

2018.10.01 இல் கம்பனியில் இருந்த சாதாரண பங்காளர்களுக்கு பங்கொன்று ரூபா 40/- வீதம் உபகாரப் பங்குகள் 1000 வழங்கப்பட்டது

## உரிய குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | |
|---|---|---|
| இலாபநட்டக் கணக்கு வரவு | 20 000 | |
| பொது ஒதுக்கக் கணக்கு வரவு | 20 000 | |
| சாதாரண பங்கு கூறப்படட மூலதனக் கணக்கு செலவு<br>(40/- படி 1 000 உபகாரப் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டது) | | 40 000 |

உபகாரப் பங்கு வழங்கலின் பின்னரான நிதிநிலமைக்கூற்று


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| கூறப்பட மூலதனம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| சாதாரண பங்குகள் (11 000) | | 340 000 |
| **ஒத்துக்கங்கள்** | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 18 000 | 18 000 |
| மொத்த உரிமையாண்மை | | 358 000 |

## உரிமை வழங்கல்

கம்பனியொன்று புதிய பங்குகளை வழங்கும்போது அப்பங்குகளைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தினை ஏற்கனவே உள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு மாத்திரம் வழங்குவது உரிமை வழங்கல் எனப்படும்.

ஏதேனும் வீதமொன்றிக்கேற்ப இயக்குனர் சபை தீர்மானித்த நியாயமான முறையில் உரிமை வழங்கல் மேற்கொள்ளப்படும். வழமையான பங்கு வழங்கல் கணக்குப் பதிவு முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**உபகார வழங்கலுக்கும் உரிமை வழங்கலுக்கும் இடையிலான ஒற்றுமைகள்**

- சாதாரண பங்குதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. (சாதாரண பங்குகள் மட்டும் வழங்கப்படும்)
- ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.
- கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் அளவு அதிகரிக்கும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# உபகார வழங்கலுக்கும் உரிமை வழங்கலுக்கும் இடையிலான வேறுபாடுகள்

| உபகாரப் பங்கு வழங்கல் | உரிமை வழங்கல் |
| --- | --- |
| 1) பிரதிபயன் இன்றி பங்குகள் வழங்கப்படும் | 1) பிரதிபயன் (காசு ) பெற்றுக்கொண்டு பங்கு வழங்கப்படும் |
| 2) காசுப்பாச்சல் இடம் பெறமாட்டாது | 2) காசுப்பாச்சல் இடம் பெறும் |
| 3) உரிமை மூலதனத்தில் மாற்றம் ஏற்படாது | 3) உரிமை மூலதனம் அதிகரிக்கும் |

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் ஆசிரியர் - கணக்கீடு, (யா/ யாழ்ப்பாண இந்துக்கல்லூரி)

கணனி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம், (கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk